**வாக்குமூலம்**

**குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–II, கொடைக்கானல்.**

**CC.எண். 04/2024**

**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **: ஸ்டெல்லா** | தொழில் | : இசைக்கருவி ஆசிரியர் |
| கணவர் பெயர் | : யுஜின் | கணவர் பெயர் | : |
| கிராமம் | : கொடைக்கானல் | பாலினம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 55/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 03.08.2026 |

(1969ம் ஆண்டின் 54வது விதியின் 9 வது பிரிவு ஏற்பாட்டின் படி இளநிலை உதவியாளர் திரு. வீரகணேஷ் என்பவரால் **P.W.2** செய்விக்கப்பட்டு, அவரின் வாக்குமூலம் பதிவு சத்தியப்பிரமாணம் செய்யப்படுகிறது)

**(1 முதல் 3 வரையான எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள், 4காம் எதிரி ஒட்டசந்திரம் E sewa kendra Video Conference மூலம் பென்னிசன் என்பவர் ஆஜரானர் )**

**முதல் விசாரணை :**

நான் கொடைக்கானல் குடியிருந்து இசைக்கருவி ஆசிரியராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரரை தெரியும். அ.சா.1ன் தெரியும், இவ்வழக்கில் ஆஜரில் உள்ள நான்கு எதிரிகளையும் தெரியும், லாக்எண்ட் காம்போண்ட் திருசபையில் உள்ள குடியிருப்பை முன்னால் போதகர் தேவதாஸ் என்பவரை காலி செய்ய சொல்லியிருந்தோம் . ஆனால் அவர்கள் காலி செய்யவில்லை . இது சம்மந்தமாக கடந்த 09.01.2023ம் தேதி காலை 11.00 மணிக்கு நானும் , மாரிய தாஸ் , அனில் குமார் , கோவில் பிள்ளை, இருதயராஜ், அமர், வெங்கடேஷ் ஆகியோர்கள் திருசபைக்கு சென்றோம் . மேற்படி 1 ஆம் எதிரியிடம் வீட்டை காலி செய்யுமாறு கூறினோம் அதற்கு அவர் அருவாள் மற்றும் கம்பியை நீட்டி எங்களை போகுமாறு விரட்டினார். இவ்வழக்கின் எதிரியான பீரித்தா என்பவர் தகாத வார்த்தைகள் கூறி எங்களை திட்டினார். மேலும் போதகர் வில்சன்

என்பவரின் மீது கல்லைவிட்டு பீரித்தா என்பவர் எறிந்தார். அதன் பின்னர் நாங்கள் வேறு வழியில்லாமல் அங்கிருந்து பயந்து சென்றுவிட்டோம். பின்பு கடந்த 11.01.2023ம் தேதி மேற்படி திருசபைக்கு சென்றோம், ஆஜர் எதிரிகள் அங்கு இல்லை. கதவுகள் மற்றும் பூட்டுகள் உடைக்கப்பட்டு இருந்தது. அதனுடைய மதிப்பு ரூ.30.000/– இருக்கும். பின்னர் பார்த்துவிட்டு வந்து என்னுடைய தலைமை இடத்திற்கு தகவல் சொல்லி, உடனே காவல் நிலையம் செல்லமுடியததால் மறுநாள் 12.01.2023ம் தேதி காவல் நிலையம் சென்று இவ்வழக்கின் புகார்தாரர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்குவிசாரணை</u>**

போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 12.01.2023ம் தேதி விசாரித்தார்கள். எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் கொடைக்கானல் காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரித்தார்கள். வேறு எங்கையும் எங்களை விசாரிக்கவில்லை. நான் சார்ச்சில் என்ன பொறுப்பில் இருக்கிறேன் என்றால் பொருளாளர் ஆக இருக்கிறேன். எந்த வருடத்தில் இந்த பொருளாளர் இருக்கிறேன் என்றால் சுமார் 4 வருடமாக இருக்கிறேன். தற்போது நிர்வாகத்தின் Administrator யார் என்றால் எனக்கு தெரியாது. முன்னால் இருந்த Administratorக்கான பொறுப்பு காலம் 2021ம் ஆண்டு முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லப்படும் நான்கு எதிரிகள் மேற்கண்ட குடியிருப்பில் தற்போது இல்லை என்றால் சரிதான். 1எதிரிக்கு ஓய்வு ஊதிய தொகையை நாங்கள் கொடுத்தோமா என்றால் எங்கள் Administrator அலுவலகத்தில் இருந்து கொடுக்கப்பட்டது. மேற்படி சார்ச் கணக்கு வழக்குகளை நான் தான் பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இரண்டு நாட்களுக்கு முன்பு அதாவது 09.01.2023ம் தேதி 1ம் எதிரி தேவதாஸ் அவர்கள் என்மீதும் , ஸ்டெல்லா, இருதயராஜ், வெங்கடேஷ் டோனி, அமர்நாந் , வில்சன் பாஸ்டர் ஆகியோர் மீது கொடைக்கானல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணைக்கு நானும், மற்ற நபர்களும் சென்றோமா என்றால் சரிதான். நான் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள தேதியான 09.01.2023ம் தேதி கொடைக்கானல் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கப்பட்டு இருந்ததா என்றால் புகார் கொடுத்துள்ளோம். அந்த போலீசார் விசாரணையில் எதிரி கொடுத்த புகாரில் , என்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்றாலும், என்மீது போலீசார் முதல் தகவல்

அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் 09.01.2023ம் தேதி நாங்கள் எந்த புகாரும் கொடுக்கவில்லை. எதிரிகள் கொடுத்த புகாருக்குத்தான் விசாரணைக்கு சென்றோம் என்றால் சரிதான். 09.01.2023ம் தேதி நான் நடந்த சம்பத்திற்கு தங்கள் மீது பதியப்பட்ட வழக்கில் இருந்து தங்களை காப்பாற்றி கொள்ளவததற்கு தங்களுடைய திருசபை சேர்ந்த நபர்களுடன் சேர்ந்து நடக்காத சம்பவத்திற்கு நடந்தது போல் பொய்யான காரணங்களை கூறி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்கண்ட ரூ.30,000/- மதிப்புள்ள பொருட்களை யார் சேதப்படுத்தினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 09.01.2023ம் தேதி சம்பவம் நடந்ததாக சொல்லபடுவதை பற்றி அன்றைய தினமே புகார் கொடுக்கப்படவில்லை. யார் உடைத்தார்கள் என்று தெரியாமலே புகார் கொத்துள்ளதால் எதிரிகளும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

N.Thisho Nanth

Digitally signed by N.Thisho Nanth
Date: 2026.08.03 18:02:23 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்எண். 2,
கொடைக்கானல்.